திரு. வீ. செல்லத்துரை : சேலம்-ஓமலூர் வழியாகச் மேட்டூர் செல்லும் பிராட்கேஜ் லைனும், சேலம் பங்களூர் லைன் ஓமலூர் வழியாகச் செல்லும் மீட்டர் கேஜ் லைனும் ஒரே கேட்டில் அமைந்துள்ளது. கேட் மூடிவிட்டால் ½ மணி நேரம் வரையில் கேட் திறப்பதில்லை. ஆகவே, அங்கு போக்கு வரத்துச்குத் தடையாக இருக்கிறது. மேற்படி கேட்டில் மேம்பாலம் கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ் நாட்டில் ஓடுகின்ற ரயில்வே குறுக்குப் பாதைகளிலெல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும். நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்பொழுது யோசிக்கலாம்.

அய்யனேரி கால்வாய்

*673 வினு—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கேத்தாண்டப் பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : இந்த கேத்தாண்டப்பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, இந்த ஆண்டில் எப்படி யாவது தூர் வார அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இக்கால்வாயைப்பற்றி இப் பொழுது ஒன்றும் திட்டம் இல்லை என்று நான் தெரிவித்தேன். ஆனல், கேத்தாண்டப்பட்டி கிராமத்தருகில் பெத்தகல்லுப்பள்ளி கால் வாயை (கல்லாற்றில் ஆரம்பித்து கேத்தாண்டப்பட்டி அய்யனேரி கலங் கல் கால்வாயுடன் சேருமிடத்தில்) சீரமைக்கும் திட்டம் முன்னேடி ஆய்வில் உள்ளது. இத் திட்டத்திற்கான மதிப்பீடு -சுமார் ரூ. 44,000.

திருப்பத்தூர் அருகே வெள்ளக் கால்வாய் புனரமைப்பு

*674 வினு—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஏரிக்கு வரும் வெள்ளக் கால்வாயை புனரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைபெறும் ?

மாண்புமிகு திரு. ப.உ.சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : திருப்பத்தூர் ஏரி மிகவும் பெரிய ஏரி. அந்த வெள்ளக் கால்வாய் ஜவ்வாது மலையிலிருந்து வருகிறது. அந்தப் பெரிய ஏரிக்கு அந்தப் பக்கத்திலுள்ள கால்வாயின் அருகில் உள்ள நிலங்களெல்லாம் விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கால்வாயை பழுது பார்த்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் திருப்பத்தூர் சென்றிருந்தபொழுது அங்கத்தினர் என்னை அழைத்துக் கொண்டு போய் காண்பித்தார். ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும், அந்த ஏரி தூர் வாரப்பட வேண்டும், ஆழப்படுத்தப்பட வேண்டும் என்று ஒத்துக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலிக்கும்.

இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்

*675 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலங்கள் குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவுறா நிலையில் இருக்கும்போது, A. O. கோர்ட்டு, பயிரிடும் விவசாயிகளை நில வெளியேற்றம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தனி விதித் துறைகள்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 16/1968) கோடாரங்குளம் கிராமத்தில் பயிரிடும் குத்தகைக்காரர்கள் 29 பேர் 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் வரை சேரவேண்டிய குத்தகைப் பாக்கியைச் செலுத்தாததால் திருவாடுதுறை ஆதீனம் தாக்கல் செய்த மனுக்களின் பேரில் திருநெல்வேலியில் ரெவின்யூ நீதிமன்றமாகச் செயல்படும், நிலச் சீர்திருத்த அனுமதி பெற்ற அதிகாரி, அவர்களை வெளியேற்றுவதற்கான ஆணையை 1971 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாளில் பிறப்பித்தார். இவர்களுள் பயிரிடும் 17 குத்தகைக்காரர்களைப் பொறுத்து வெளியேற்ற ஆணை 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 23 ஆம் நாளில் நிறைவேற்றப்பட்டது. இவர்களுள் 27 பேர், திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வெளியேற்ற ஆணையை எதிர்த்து சிவில் மறு விசாரணை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.